★ விலை ரூபா 1:00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆனி 24 தை. 26 இதழ் 147

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 8—7—83

## 'உத்தரதேவி' ரயில்சேவை இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உத்தரதேவி ரயில் சேவை இன்று நடைபெறும்.

இன்று காலை 6-15க்கு காங்கேசன்துறையிலிருந்து உத்தர தேவி கடுகதிரயில் கொழும்பு நோக்கிப் புறப்படும்.

பகல் 11-55க்கு கொழும்பு கோட்டையிலிருந்து உத்தர தேவி கடுகதிரயில் காங்கேசன் துறை நோக்கிப் புறப்படும்.

இந்த இருரயில் சேவைகள் தவிர எண்ணெரயில் ஒன்று கொழும்பிலிருந்து இன்று காலை காங்கேசன்துறைநோக்கி வரவுள்ளது (நா. அ)

## ரயில் பிரயாணிகள் நேற்று ஏமாற்றத்துடன் திரும்பினர்

நேற்றுமுதல் மீண்டும் காங் கேசன்துறை - கொழும்பு தபால் ரயில் சேவையில் ஈடு படுமெனத் தெரிவிக்கப்பட்ட தைத் தொடர்ந்து பல பிர யாணிகள் தங்கள் உடைமை களுடன் சென்று இச்சேவை நடைபெறுததால் ஏமாற்றத் துடன் திரும்பினார்கள்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் போக்கு வரத்து அமைச்சரைச் சந்தித் ததைத் தொடர்ந்து நேற்றுத்

(8-ம் பக்கம் பார்க்க)

# தருமர், கோவை விடுதலை பற்றி பாதுகாப்புசபை இன்று முடிவு

## எதிர்க்கட்சித் தலைவருக்கு ஜனாதிபதி தகவல்

(கொழும்பு)

இன்று கூடவிருக்கும் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் தமிழ் ஈழ விடுதலை அணித் தலைவர் டாக்டர் எஸ் ஏ. தர்மலிங்கம், செயலாளர் கோவை மகேசன் ஆகியோரை விடுதலைசெய்வதுபற்றி ஆராயப் படும். அவர்களை விடுதலை செய்ய முடியுமானுல் விடுதலைசெய்யப் படுவார்கள்; இல்லையெனில் தனி வீடு ஒன்றில் அவர்களைவைப்ப தற்கு ஏற்பாடு செய்யப்படும்.

ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெய வர்த்தனு தம்மைச் சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கத்திடம் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனுவை அவரது மாளிகையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ அமிர்தலிங் கம் நேற்றுச் சந்தித்துப் பேசி ஞர்.

அப்போது காவலில் வைக் கப்பட்டுள்ள 'சுதந்திரன்' ஆசி ரியர் கோவை மகேசன், தமிழ் ஈழ விடுதலை அணித் தலைவர் டாக்டர் எஸ் ஏ. தர்மலிங்கம் ஆகியவர்களை விடுதலைசெய்ய வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் வற்புறுத்தினுர்

இவர்கள் கைதுசெய்யப்பட்ட பின்னரே யாழ்ப்பாணத்தில் வன்செயல்கள் அதிகரித்துள் ளனவென்று சுட்டிக்காட்டிய திரு. அமிர்தலிங்கம், வன் செயல்களுக்கும் அவர்களுக்கும் தொடர்பில்லையென்றும் எடுத் துக் கூறினுர்.

குறிப்பாக, "டாக்டர் தர்மலிங்கம் 77 வயதான முதியவர். இரு தடவை இரு தய நோய்க்குள்ளானவர். இவர் கைதானது கேள்விப் பட்டு இவரது தமையன் டாக்டர் வெற்றிவேலு மய ங்கி விழுந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்" என்று திரு. அமிர்தலிங்கம் எடுத்துக் கூறிஞர்.

இதற்குப் பதிலளித்த ஜனாதி பதி, இன்று வெள்ளிக்கிழமை பாதுகாப்புச் சபை கூடவிருப்பதாகவும், அங்கு இப்பிரச்சினைபற்றி ஆராய்ந்தபின் அவர்களை விடு தலைசெய்ய முடியுமானுல் விடு தலை செய்வதாகவும் இல்லையெ னில் தனி வீடொன்றில் அவர் களை வைப்பதற்கு ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்தார்.

## வெலிக்கடைச் சிறையில் டாக்டரும் கோவையும்!

(கொழும்பு)

தமிழ்ஈழ விடுதலைஅணித் தலைவர் டாக்டர் எஸ். ஏ தர்மலிங்கமும், அதன் செய லாளரும் 'சுதந்திரன்' ஆசிரிய ருமான கோவைமகேசனும் இப்போது வெலிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டுள்ள னர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை யில்தடுத்துவைக்கப்பட்டிருந்த இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் விமானப் படை விமானத்தில் கொழும்புக்குக் கொண்டுவரப் பட்டனர்.

இம்மாதம் முதலாம் திகதி யாழ் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரிக்கப்பட்ட டாக்டர் தர்மலிங்கமும், கோவை மகேசனும் யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக் கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் கொழும்பு கொண்டுசெல்லப்பட்ட இவர் கள் வெலிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டனர்.

## சேர். பரராஜசிங்கத்துக்கு சபை அனுதாபம்

(கொழும்பு)

சேர் சங்கரப்பிள்ளை பரராஜ சிங்கத்தின் மறைவுக்கு நேற் றுப் பாராளுமன்றத்தின் அனு

(8-ம் பக்கம் பார்க்க)

## திருமலைக்கு தமிழ்பொலிசார்

திருகோணமலையில் கடமையாற்றுவதற்குக் கூடியளவு தமிழ் பேசும் பொலிசாரை அனுப்பிவைக்க ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த் தனு இச்சந்திப்பின்போது ஒப்புக்கொண்டார்.

ஏ. எஸ். பி. தரத்தில் இருந்து ஏனைய சகல பிரிவு களிலும் கூடுமான அளவு தமிழ்ப் பொலிசாரை நியமிக்க ஏற்பாடுசெய்வதாக ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவரிடம் உறுதியளித்தார்.

திருகோணமலையில் கடந்த வாரங்களில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாக திரு. அமிர்தலிங்கம் ஜனாதிபதி க்கு எடுத்துச் சொன்னுர்.

திருகோணமலையில் நடந் துள்ள இனவாத வன்முறை களை நேரடியாகச் சென்று பார்த்துவிட்டு சில கோரிக்கை களை முன்வைத்து தாதிறனுப்

(8-ம் பக்கம் பார்க்க)

## இன்ஸ்பெக்டர் குருசாமி கொலை வழக்கு: 3 எதிரிகளுக்கும் குற்றப் பத்திரிகை வழங்கப்பட்டது

(கொழும்பு)

இன்ஸ்பெக்டர் குருசாமி கொலைவழக்கு எதிரிகளான ஜெகன், சிறிகுமார், தடேசுதா சன் ஆகிய மூவருக்கும்நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத் தில் நீதிபதி ரூபேர்ட்சில்வா முன் ஆஜர் செய்யப்பட்டுக் குற்றப்பத்திரிகை வழங்கப்பட் டது.

எதிரிகள் தம் சார்பில் சட் டத்தரணிகள் யாரையும் நிய மிக்கவில்லையென்றும், தேவை யில்லையென்றும் தெரிவித்த னர். அரசதரப்பில் சட்டத் தரணியொருவர் நியமிக்கப் படுவதையும் அவர்கள் விரும்ப வில்லை. ஆனுல் சட்டப்படி அரச சட்டத்தரணி ஒருவர் அவர்களுக்காக நியமிக்கப்படு வார் என்ற அறிவிக்கப்பட் டது.

வழக்குவிசாரணை அக்டோ பர் 18-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (இ)

## சேயோன் இன்று ஆஜர்

(கொழும்பு)

பண்ணாகத்தைச் சேர்ந்த இளைஞர் சேயோன் இன்று கொழும்பு மேல் நீதிமன்றத் தில் ஆஜர் செய்யப்பட்டு குற்றப்பத்திரிகை வழங்கப் படும் என்று தெரிகின்றது.

ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையம் தாக்கப்படவிருந்தது பற்றித்தெரிந்திருந்தும் பொலி

(8-ம் பக்கம் பார்க்க)

## சிவஞானத்துடன் அமைச்சு ஆலோசனை

(கொழும்பு)

யாழ். மாநகரசபை ஆணை யாளர் திரு. சி. வி கே. சிவஞானம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச் சேரி நகரசபைகளின் செய லாளர்கள் ஆகியோரை அழைத்து உள்ளூராட்சி அமைச்சு ஆலோசனை நடத் தியது.

(8-ம் பக்கம் பார்க்க)

### கேள்விப்பத்திரம்

யாழ். பல்தொழில்நுட்ப நிறுவனத்தில்
"திருத்த வேலை, வெள்ளை அடித்தல்" தொடர்பான கேள்விப்பத்திரங்களுக்கான முடிவு திகதி 15-07 1983 பி. ப. 2 00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளதென்பதை அறியத்தருவதுடன், இதுவிடயமாகத் தகவல்கள்பெற விரும்புவோர் மேற்படி நிறுவன அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்

7897

### சயன்ஸ் அக்கடமி

A/L 85 புதிய பிரிவு
ஆரம்பம் 10-7-83 ஞாயிறு

| | | |
|---|---|---|
| பி ப. 12-30 | பௌதிகம் | திரு. தவா |
| 1-30 | விலங்கியல் | தம்பிராசா |
| 2-30 | இரசாயனம் | திரு சத்தீஸ் |
| 3-30 | பௌதிகம் | திரு. மணியம் |
| 4-30 | தாவரவியல் | திரு. சிவவீரசிங்கம் |

310A, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம். (7885)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மேற்கில் கண்ணகையம்மன் கோயில் வீதியில்நல்ல தண்ணீர் கிணற்றுடன் வீடுகட்டக் கூடிய $4\frac{1}{2}$ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு திரு. நா. ஏகாம்பரம் சட்டத்தரணி வட்டுக்கோட்டை. 7855

அரியாலை மேற்கு மாநகர சபைஎல்லைக்குள் (கச்சேரியிலிருந்து ஒரு மைல் தூரம்) வீடுகட்டக்கூடிய 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. நல்ல தண்ணீர், விபரங்களுக்கு: க. ஜெயானந்தன் இல 91 கணத்தறை வீதி, (சிவன்கோவில் மேற்கு வீதி) திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 7871

கோண்டாவில் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் வீடு கட்டக்கூடிய எட்டுப்பரப் புக்காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு: மு. நவரத்தினராசா தபால் கந்தோருக்கு அருகாமையில் பொற்பதி றோட் கோண்டாவில் கிழக்கு கோண்டாவில் தொலைபேசி 22694 அல்லது 23150 (7877)

கோழி வளர்ப்பவர்களுக்கு எங்களிடம் புளுங்கல் அரிசி குறுநல் விற்பனைக்கு உண்டு. விஜிதா அரிசி ஆலை தாவடி தெற்கு கொக்குவில். 7870

கல்வியங்காடு இராச வீதிக்கருகில் நாலு பரப்புக்காணி றோட்டோரத்தில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சி. மகேசன் வேணியடி திருநெல்வேலி. 7863

HONDA CD 125 (Twin) 84 ஸ்ரீ தொடர் இலக்க கறுப்பு நிறம் விபரங்களுக்கு கே. கணேஸ்வரன், 230/14 காங்கேசன்துறைவீதி, (சித்திரேசன் கோயில் முன்) யாழ்ப்பாணம். 7857

## தவறிவிட்டது

3-7-83ம் திகதி மண்டைதீவுக்கும் யாழ்ப்பாணம் 3ம் குறுக்குத் தெருவுக்கு மிடைப்பட்ட றோட்டில் எனது மோட்டார் சைக்கிள் லைசென்சும் 3 ஸ்ரீ 9426 இலக்க மோட்டார் சைக்கிள் இன்சூறன்சும், ரக்கும் விழுந்து விட்டது. கண்டெடுத்தோர் தயவுசெய்து ஒப்படைக்கவும் அல்லது தகவல் தரவும். சி. ஏகாம்பரம் 6ம் வட்டாரம் மண்டைதீவு. தகுந்த சன்மானம் வழங்கப்படும் 7866

## பயிற்சி

Computer Programming டிப்ளோமா Apptitude Test சித்தியெய்துபவர்களுக்கு மட்டும் வகுப்புக்கள் ஆரம்பம் 16-7-83 Apptitude Test 12-7-83இல் நடைபெறும். Radio Shack கம்பியூட்டரில் பயிற்சி அளிக்கப்படும். நேரில் தொடர்பு கொள்க பதிவாளர் தேசியக்கல்வி நிறுவனம் மொபசாக்கட்டிடம் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7873

## தேவை

ஜி. சி. ஈ. சித்தியடைந்த கணக்கியல் அனுபவமுள்ள பெண்கள் மின்சார உபகரண விற்பனை ஸ்தாபனத்திற்கு உடனடியாகத் தேவை. சொந்த கையெழுத்துடன் விண்ணப்பிக்கவும். வி. ஸ்ரீ சக்திவேல் Pats Power Electricals 601, கே. கே. எஸ். றோட் யாழ்ப்பாணம். 7869

சுண்டிக்குளி கொழும்புத்துறை ஈச்சமோட்டைப்பகுதியில் ஒருபரப்புக்காணி தேவை. க. விக்னேஸ்வரன், கட்டுடை வேலி, மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். 7884

### புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### புலோலி கிழக்கு பருத்தித்துறை

## வெற்றுச் சாக்கு கேள்விப்பத்திரம்

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் கீழ்வரும் வகையான வெற்றுச் சாக்குகள் விற்பனைக்காக கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது. கொள்வனவு செய்ய விரும்புவோர் தலைவர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 15-07-83ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பத்தை அனுப்பிவைக்கவேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வெற்றுச்சாக்குக் கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரத்துடன் மீளளிக்கும் வைப்புப்பணமாக ரூபா. 250/- செலுத்துதல் வேண்டும். வைப்பும் பணம் இடாதோரின் கேள்விப்பத்திரம் எதுவித காரணத்தையிட்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது இதற்கான வைப்புப் பணத்தையும்; விண்ணப்பப் படிவத்திற்கான ரூபா. 2/- ஐயும் செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். உரிய பணத்தை நேரடியாகவோ அல்லது தபால் காசுக்கட்டளை மூலமாகவோ அனுப்பி வைத்தால் கேள்வி விண்ணப்பப் பத்திரம் உரியவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

### வெற்றுச் சாக்கு விபரம்

| | |
|---|---|
| அரிசி | 336 |
| நவதானியம் | 330 |
| மா | 791 |
| சீனி 1 அந். | 425 |
| சீனி 2 அந். | 296 |
| நெல் | 433 |
| இழக்கம் | 217 |
| அரிசி 1 அந். | 211 |
| பை | 492 |
| | 3531 |

சோ. அருணகிரி
பொதுமுகாமையாளர்

புலோலி ப. நோ. கூ. சங்கம்
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.
2-07-1983 7880

## அறிவித்தல்

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக்கூட்டுறவுச்சங்கத்தில் (கொடிகாமம்) 5000 வெற்றுச் சாக்குகள் மட்டில் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றது. ரூபா150/-முற்பணம் கட்டி கேள்விப்பத்திரங்களைச் சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவேண்டும். 15-07-83ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00மணி வரை பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். பொருட்களை சங்கத்தில் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்,
தென்மராட்சி கிழக்கு
ப. நோ. கூ. சங்கம்,
கொடிகாமம்,
5-07-83. 7881

## விற்பனைக்கு

12—15 அடி உயர புதிய குரோமியம் மூலாம் பூசப்பட்ட கொடிஸ்தம்பம் 12—35—45 கிலோ எடையுள்ள ஆலய மணிகள் விற்பனைக்குண்டு

பூரண விளைத்திறனுடைய பூஜைகப்புரக பப்பாய் வெங்காய விதைகள் விற்பனைக்குண்டு.

பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்
251, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.
(7860)

## அலங்கார மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில்வடக்கு அருள்மிகு ஸ்ரீஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார மகோற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியது.
இம்மகோற்சவம் இம்மாதம் 15ம் திகதி சங்காபிஷேகத்துடன் முடிவடையவுள்ளது.

## கல்விக் கண்காட்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சென்த்தணிஸ் பாடசாலைகளின் கல்விக்கண்காட்சி கடந்த செவ்வாய், புதன்கிழமைகளில்கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.
இக்கண்காட்சியில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரியும், கௌரவவிருந்தினராக வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். சிவபாதம்பிள்ளையும் கலந்துகொண்டனர்.

## ச. ச நிலையத் திறப்பு விழா

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் தொழு நோய் பரவியுள்ள சுழிபுரம் காட்டுப்புலம் கிராமத்தில் சுமார் 75 ஆயிரம் ரூபா செலவில் நிறுவியுள்ள சன சமூக நிலைய நிலையத்தின் திறப்பு விழா எதிர்வரும் செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது. லயன்ஸ் முன்னாள் மாவட்ட ஆளுநர் டாக்டர் அரியம் தம்பையா இதைத் திறந்து வைக்கவுள்ளார்.

## நயினை நாகபூஷணி மகா கும்பாபிஷேகம்

(வேலணை)

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவிலின் மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 14-ம் திகதிநடைபெறவிருக்கின்றது.
இக்கோவிலின் கும்பாபிஷேகத்தினையொட்டி ஆலயத்தின் திருப்பணி வேலைகள் யாவும் மிகவும் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

## ரூ.1லட் 25 ஆயிரம் ஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தொழில் நுட்பப் பிரிவு ஒன்றை ஆரம்பிப்பதற்கு இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவை வட்டுக்கோட்டை எம். பி. கனாநிதி நீலன் திருச்செல்வம் ஒதுக்கீடு செய்துள்ளார்.

## தேவை

மரத்தளபாடங்கள் பொலிஷ் பண்ணுவதற்கும் தச்சுவேலை செய்வதற்கும் வேலையாட்கள் தேவை. நேரில் வரவும்

### டில்கா பேணிச்சர் பலெஸ்

234, 236, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்: போன்: 24186

# SCIENCE HALL

(வெலிங்டன் சினிமா பின்புறமாக)
விசேட ஆங்கில வகுப்புக்கள்
ஆரம்பம் 9-7-83 (சனி)
யாழ் நகரில் தனித்துவமான
முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை
திரு. றெயினேல்ட், திரு. பிறிட்டோ
ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க
நவீன முறையில் கற்பிக்கப்படும்.
விபரங்களுக்கு:

# SCIENCE HALL

7883)

மாணவ, மாணவிகள்
ஆவலுடன் எதிர்பார்த்திருந்த
SI அலகு முறையில்
பௌதிகம் அடங்கன் I வெளிவந்துவிட்டது

1. பொதுப் பௌதிகம்
(SI அலகுமுறை அளவீடுகள் காவிகள் நேர்கோட்டியக்கம் ஈர்ப்பின்கீழ் ஆர்முடுகல்)
2. ஒளியியல்
(க. பொ. த. உயர்தர பாடத்திட்டத்திற்கமைய எழுதப்பட்டது)

விலை ரூபா 16-30 சதம்
ஆசிரியர் க. புவனபூஷணம்
B Sc. (Cey Dip in Ed
பகுதி நேர விரிவுரையாளர்: திறந்த பல்கலைக்கழகம்
99, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.
(7874)

## வெற்றுச்சாக்கு விற்பனை

4000 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்குள்ளது மீளளிக்கப்படாத ரூபா 5/- செலுத்தி கேள்விப்பத்திரம் சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். வைப்புப் பணம் ரூபா 200/- செலுத்தவேண்டும்.

முடிவு திகதி 15-7-1983

### வெற்றுச்சாக்கு விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவு | 1 தரம் | 280 |
| 2. | மாவு | 2 தரம் | 638 |
| 3. | மாவு | 3 தரம் | 92 |
| 4. | அரிசி | 1 தரம் | 49 |
| 5. | அரிசி | 1 அந்தர் | 1677 |
| 6. | சீனி | 1 அந்தர் | 282 |
| 7 | நவதானியம் | | 371 |
| 8. | கழிவு | 1 தரம் | 577 |
| 9. | கழிவு | 2 தரம் | 338 |
| | | மொத்தம் | 4304 |

பொதுமுகாமையாளர்,
பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
பூநகரி.
(7882)

சகல வித றேடியோ - ரி. வி - வீடியோ டெக் - மணிக்கூடுகள்
சிறந்த முறையில் திருத்திக்கொள்ள
வீனஸ் றெக்கோடிங் றேடியோ வாச் வேக்ஸ்
266/1, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டர் அருகாமை), யாழ்ப்பாணம்.

யாழ். மாவட்ட

# ஆஸ்பத்திரி சிற்றூழியர் நேர்முகப் பரீட்சை நிறுத்தம்

(பண்டத்தரிப்பு)

யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இவ்வாரம் நடைபெற்றுவந்த ஆஸ்பத்திரி சிற்றூழியர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையை மறுஅறிவித்தல் வரும் வரை நிறுத்தி வைக்குமாறு கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சு திடீரென அறிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்காக ஆண் பெண் தொழிலாளர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த மாதம் 29-ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வந்தது.

யாழ்.மாவட்ட தொகுதி எம். பிக்கள் சிபார்சு செய்து அனுப்பிய பெயர்ப் பட்டியலில் உள்ளவர்களும் யாழ். மாவட்ட அமைச்சர் அலுவலகத்திலிருந்து சிபார்சு செய்யப்பட்டு அனுப்பப்பட்டவர்களின் பட்டியலிலிருந்தும் சுமார் 300 க்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் கடந்த 4-ம் திகதி கொழும்பிலுள்ள சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து கிடைத்த திடீர் உத்தரவைத் தொடர்ந்து இந்த நேர்முகப் பரீட்சை மறு அறிவித்தல் வரை ரத்துச் செய்யப்பட்டுள்ளது. கடந்த 5-ம் திகதி வரை தொடர்ந்து நடைபெறவிருந்த நேர்முகப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் பின் போடப்பட்டுள்ளதாக யாழ். சுகாதாரசேவை கண்காணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதனால் இதுவரை நடைபெற்ற நேர்முகப்பரீட்சையில் கலந்து கொண்ட நூற்றுக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் பாதிப்பு அடைந்துள்ளனர்.

## திருச்சபையின் கொழும்புப் பேராயர் இன்று யாழ்.விஜயம்

[அரியாலை]

இலங்கைத் திருச்சபையின் கொழும்பு அத்தியட்சாதீனப் பேராயர் பேரருட் திரு சுவீதின் பெர்னாண்டோ ஆண்டகை வடபகுதிக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இன்று வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணம் வருகிறார்.

சுண்டிக்குளி பரி. யோவான் ஆலயத்தில் இன்று மாலை நடைபெறவிருக்கும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக நியமனம் செய்யப்பட்டிருக்கும் திருமதி ப. ஜெயவீரசிங்கத்தின் பதவியேற்பு வைபவ ஆராதனையில் கலந்துகொள்ளும் பேராயர், ஞாயிற்றுக்கிழமை காலை நல்லூர் பரி யாக்கோபு ஆலயத்தில் நடப்படுத்தல், திருவிருந்தாராதனையை ஒப்புக்கொடுத்து அருளுரை நிகழ்த்துவதுடன் அன்று நல்லூர் சபையோர் அளிக்கும் காலைப் போசன வைபவத்திலும் கலந்துகொள்வார்.

திங்கட்கிழமை சுண்டிக்குளி பரி யோவான் ஆலயத்தில் திடப்படுத்தல், திருவிருந்தாராதனையை ஒப்புக்கொடுப்பார்.

பேராயரின் உத்தியோகபூர்வமான விஜயத்துக்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட்திரு சாம். டி ஹோர் கிங்டன் அடிகளார் மேற்கொண்டுள்ளார். (அ)

## பொன்னாலையில் மழைவேண்டிப் பிரார்த்தனை

(சுழிபுரம்)

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலில் நாளை சனிக்கிழமைமழைக்காகப்பிரார்த்தனை நடைபெறவுள்ளது.

சனிக்கிழமைகாலை தொடங்கித் தொடர்ந்து மாலைவரை இவ்வழிபாடு நிகழவிருக்கிறது.

ஆழிமழைக் கண்ணா எனத் தொடங்கும் திருப்பாவைப்பாசுரத்தை ஒருவர் மாறி ஒருவராகத் தொடர்ந்து படித்து வேண்டுதல் புரிவதால் மழை பெய்வது வழக்கம் என்ற வைணவ சம்பிரதாயத்தின்படி சமீப காலத்தில் தமிழ்நாட்டிலும் மழை பெய்தது என்ற அனுபவத்தின் பிரதிபலிப்பாகவே இவ்வழிபாடு நிகழ்கின்றது.

(ப)

## கிறிஸ்தவ ஆசிரியர் சங்கக் கூட்டம்

[மானிப்பாய்]

யாழ். கிறிஸ்தசேவா ஆசிரியர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் வரும் 17ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை திரு த. சுப்பிரமணியம் தலைமையில் யாழ். பரராஜசேகர வித்தியாசாலையில் நடைபெற விருக்கிறது.

## பிரியாவிடையும் வரவேற்பும்

(அரியாலை)

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் இளைப்பாறிய அதிபர் திருமதி கி. எ. ச. செல்லையாவுக்குச் சேவைநலம் பாராட்டு விழாவும், புதிய அதிபர் திருமதி ப. ஜெயவீரசிங்கத்திற்கு வரவேற்பு விழாவும் நடைபெறவிருக்கின்றன.

இவ்விழாவிற்கு கொழும்பு அத்தியட்சாதீன பேராயர் அதிவணக்கத்துக்குரிய சுவிதின் பெர்னாண்டோ ஆண்டகை தலைமைவகிப்பார். திருவாளர்கள் எம். பரராஜசிங்கம், ஜே. எம். சபாரத்தினம், பரி. யோவான் கல்லூரி அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராஜன், திருமதி எம். அரியநாயகம், திரு. கே. இராசசிங்கம், திருமதி ரி. இராசரத்தினம் ஆகியோர் இவ்விழாவில் ஆசியுரை வழங்குவார்கள். (அ)

## வற்றுப்பளை கொலைவழக்கு:

# 4-ம் எதிரி பிணையில் செல்ல அனுமதி

[புலோலி]

வற்றுப்பளை பொன்னையா கொலைவழக்கு 4-ம் எதிரியைப் பிணையில் விடுவதற்கு மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

22 - 6 - 82 அன்று முல்லைத்தீவு வற்றுப்பளையைச் சேர்ந்த பொன்னையா என்பவரைக் கொலைசெய்தார்கள் என நாலு எதிரிகள் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

இவ் எதிரிகளில் 4ம் எதிரியான இரத்தினசிங்கம் நவரத்தினம் என்பவரைப் பிணையில் விடுமாறுகோரி அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் பிணை மனு வொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இப்பிணைமனு மீதான விசாரணையை மேற்கொண்ட அனுராதபுரம் மேல்நீதிமன்ற நீதிபதி திரு. எஸ் ஆனந்தகுமாரசாமி எதிரியை 5,000 ரூபா பிணையில் செல்ல அனுமதி வழங்கினார்.

இதனைத்தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி திரு. வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட எதிரி 5,000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

எதிரி சார்பில் சட்டத்தரணிகளான எஸ் ரி ராஜகுலேந்திரா ஆர். ஸ்ரீநிவாசா ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

### யாழ். ஆஸ்பத்திரியில் டாக்டர் வெற்றிவேலு

[அளவெட்டி]

யாழ்ப்பாணம் தனியார் வைத்தியர் சங்கப்பிரமுகரும் பிரபல டாக்டருமான திரு வெற்றிவேலு சுகவீனம் காரணமாக இன்று யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ் எம். பி வி. யோகேஸ்வரனின் தந்தையாவார்.

## நாளை நடக்கும் கிரிக்கெட் போட்டி

[மானிப்பாய்]

மானிப்பாய் இந்துக் கல்லூரி விளையாட்டரங்கில் நாளை காலை மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்களுக்கும் பழைய மாணவர்களுக்குமிடையில் கிரிக்கெட் போட்டி நடைபெற விருக்கிறது. மாலையில் மட்மின்ரனும் நடைபெறும்.

## இடமாற்றம் ரத்து

[பண்டத்தரிப்பு]

சங்கானை அரசினர் வைத்தியசாலை டாக்டர் ரி. பகீரதனின் திடீர் இடமாற்றம் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் அறிவித்துள்ளார்.

சுமார் ஒன்றரை வருடகாலம் மட்டுமே இவ்வைத்தியசாலையில் கடமையாற்றிய டாக்டர் ரி. பகீரதன் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து யாழ். சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு திடீரென இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். இந்த இடமாற்றத்தை ரத்துசெய்து தருமாறு வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. அ. அமிர்தலிங்கம், திருச்செல்வம், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர்கள் திருவாளர்கள் ச. பூபாலசிங்கம், சு. நடேசு ஆகியோர் கேட்டிருந்தனர் தெரிந்ததே.

இன்று

## புங்குடுதீவு அந்தோனியார் ஆலய கொடியேற்றம்

தம்மை அண்டி வழிபடும் அடியார்களுக்கு இறைவனுடைய வல்லமையால் அவர்கள் வேண்டிய வரங்களை அளித்துவரும் அருள் மிகு அந்தோனியாருக்கு "புங்குடுதீவின்" தென்பகுதி நெய்தல் நிலத்தில் அமைந்துள்ள ஆலயத்தில் விழா எடுக்கின்றார்கள். இவ்விழா இலங்கையின் பலபாகங்களிலும் வாழும் பக்தர்களினால் ஒன்று சேர்ந்தே எடுக்கப்படுகின்றது. மிகவும் சிறு ஆலயமாக இருந்தாலும், இவ்வாலயத்தின்மூலம் கல்விப் பணியும், சமூகப்பணியும், கலைப்பணியும் பரவலாகச் செய்யப்பட்டு வருகின்றமை புனிதருடைய அற்புதத்தின் மகிமையை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. மத வேறுபாடு இன்றிச் சகலமக்களும் செவ்வாய்க்கிழமை தோறும் திரளாகக்கூடிப் பஜனை செய்தும் தியானித்தும் வழிபட்டு வருவதை நேரடியாக அறியமுடிகின்றது. ஈழத்தின் தவில், நாதஸ்வர, கர்நாடக சங்கீத கலைஞர்கள் இவ்வாலய விழாவின்போது பண்ணிசைத்து மக்களை இறை பக்தியில் இணைக்க வைப்பது இலங்கையின் வரலாற்றில் ஒரு புதுமையாகும்.

மறுமலர்ச்சியின் முன்னோடியாக கீழைத் தேச பண்பாட்டு முறைகளைக் கைக்கொண்டு கத்தோலிக்க மதத்தை இப்பகுதியில் எட்டி நின்று பார்த்தவர்களையும் அண்டிவர அற்புதம் செய்த அந்தோனியாருடைய மகிமையை இங்கு அறியலாம். சகல வீடுகளிலும் துன்பம் வரும்போது அந்தோனியாரே என மக்கள் வேண்டுவதை அழைப்பதைக் கேட்கக் கூடியதாக இருக்கின்றது.

ஆதரவற்ற குழந்தைகளுக்காக "தெய்வக் குழந்தைகள்" இல்லம் இவ்வாலயத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது. ஆலயத் திருவிழாவிற்கு வரும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகின்றது.



பூசைப்பலியில் நாட்டின் அமைதி/ஒற்றுமைக்கும் ஒடுக்கப்பட்டோரின் விடிவுக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் வேண்டுதல் செய்வது முக்கிய பங்காக இருக்கும். சிறப்பாக அருள்மிகு அந்தோனியார் வீதியுலா வரும் காட்சியும், பக்தர்களின் கூட்டமும் இசை மழையும் மக்களை இறையின் பால் அழைத்துச் செல்லும். சகோதர அன்பை விளக்கும் கோடி அற்புதம் புங்குடுதீவில் நிகழ்வதை அறியலாம்.

- மலர்மன்னன்

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | நிகழ்ச்சி முன்னோட்டம் |
| 6-02 | சுக்கி நிகழ்ச்சி (தமிழ்) |
| 6-30 | சிங்கள நிகழ்ச்சி |
| 7-00 | செய்தி மஞ்சரி (தமிழ்) |
| 7-30 | ஆங்கில நிகழ்ச்சி |
| 8-15 | செய்தி மஞ்சரி (சிங்களம்) |
| 8-29 | நாளைய நிகழ்ச்சிகள் |
| 8-30 | ஆங்கில நிகழ்ச்சி |
| 9-00 | இசை நிகழ்ச்சி |
| 9-30 | செய்தி மஞ்சரி (ஆங்கிலம்) |
| 9-45 | ஒளிபரப்பு முடிவு. |

## நிறைவு விழா

(கரவெட்டி)

கலட்டி ஐக்கியவிளையாட்டுக் கழகத்தின் ஆண்டு நிறைவு விழா கழகமைதானத்தில் இம்மாதம் 16ம் திகதி நடைபெறவுள்ளது.

திரு த.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதமவிருந்தினராக உடுப்பிட்டி எம் பி திரு த. இராசலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் எம் பி திரு மு சிவசிதம்பரம், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு இ. ஐயாத்துரை ஆகியோர் கலந்து கொள்வர்.

## குழாய்கிணறுகளை அமைக்குமாறு கோரிக்கை

(திருக்கோணமலை)

கன்னியாய் கிராமத்தில் நீண்ட காலமாக நிலவும் குடிதண்ணீர் தட்டுப்பாட்டினை நீக்கும் முகமாக அப்பகுதி மக்களுக்கு குழாய்க் கிணறுகளை அமைத்துத் தருமாறு கன்னியாய் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் திரு. யோ, பீ. பிரான்சிஸ் அரசாங்கத்தினை கோரியுள்ளார்.

இது சம்பந்தமாக அரசாங்க அதிபர் திரு: கமிலஸ் பெர்னாண்டோவை கிராமவாசிகள் அடங்கிய குழுவொன்று திரு, பீ, பிரான்சிஸ் தலைமையில் சந்திக்கவுள்ளது.

## தற்காலிக வேலை நீக்கம்

[யாழ்ப்பாணம்]

மல்லாகத்தில் கைதி ஒருவர் கடத்தப்பட்டது தொடர்பாக அன்று கடமையிலிருந்த சிறைச்சாலை ஓவசியர் கிறிஸ்தோஸ்தர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். [மா]

குடத்தனை

# கத்திக்குத்துச் சம்பவம் சந்தேகநபர் றிமாண்டில்

(புலோலி)

குடத்தனை கத்திக்குத்து மரணம் சம்பந்தமாக பொலிசாரால் தேடப்பட்டுவந்த இறந்தவரின் சகலன் பொலிசில் சரணடைந்து றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

இரு சகோதரிகளுக்கிடையே ஏற்பட்ட தகராறினால் ஒருவரின் கணவனான பொன்னன் இராசநாயகம் என்பவரை மற்றவரின் கணவனான சிவகுரு என்பவர் கத்தியால் குத்தியதாகவும், கத்திக்குத்திற்குள்ளானவர் உடனடியாக மரணமானதும் தெரிந்ததே. இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை பொலிசார் சந்தேகநபரான சிவகுரு என்பவரைத் தேடிவந்தனர்.

சந்தேகநபர் பொலிசில் சரணடைந்தார். பொலிசார் இவரை பருத்தித்துறை நீதவான் திரு. கே. கணபதிப்பிள்ளை முன்னிலையில் ஆஜர் செய்தபோது நீதவான் சந்தேகநபரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 4-15 7-00
சனி, ஞாயிறு 1-30
ஜெய்சங்கர்
துணிவே துணை
(புதிய பிரதி)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம்.ஜி.ஆர்—ஜெயலலிதா
நீரும் நெருப்பும்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி யாழ். 10.30, 2.30, 6.30 மட்டும்
இன்னும் சில தினங்கள் மட்டும்
இப்பொழுது மிகுந்த பரபரப்பூட்டி காட்சியளிக்கிறது!
சிவாஜி, லட்சுமி
மனோரமா, தேங்காய்
தியாகம் வண்ண சித்திரம்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
9-30
பிரதாப்—சோபா
மூடுபனி

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கடைசி 3 தினங்கள்
மணாளனே
மங்கையின் பாக்கியம்

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
மனோகரா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
3வது வெற்றி மாதம்
கமலஹாசன், ஜெய்சங்கர், ஸ்ரீதேவி
வாழ்வே மாயம் (ஈஸ்ட்மன் கலர்)

ராணி தினசரி 10-30, 2-00, 6-00, 9-30.
(யாழ். நகர்)
ஜனத்திரள் நிறைந்த - 8வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
சகல கலா வல்லவன்

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-00, 4-30, 7-00.
(யாழ். நகர்)
BRUCE LEE'S (Karate Film)
Exit the Dragon,
Enter the Tiger

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00
His Partner brutally murdered......
His girl friend executed......
SEAN KANE is out for VENGENCE
CHUCK NORRIS in
An Eye For An Eye

றீகல் - Regal தினசரி 10-30, 2-00, 4-30
7-30, 9-30 P. M.






கபீர்பேடி.....
சனம் சூரி..
நடிக்கும்
"கேர்ல்
(f)ப்ரம்
இந்தியா"
GIRL
FROM
INDIA
TECHNICOLOR
இனிய நான்கு
ஹிந்திப் பாடல்கள்
உங்களை
மெய்மறக்கச் செய்யும்
வயதுவந்தவர்கள்
மட்டும்


# இன்றைய பலன்

ஆனி 24-ம் திகதி
வெள்ளிக்கிழமை
(8-7-83)

மேடம்: பிரயாணத்தின் பொருள் நழுவக்கூடும் தனி வழிப் பயணத்தைத் தவிர்க்கவும் அதிக சிந்தனையில் ஈடுபடுவீர்கள் கொடுக்கல் வாங்கல் மூலம் பண நெருக்கடி ஏற்படும்.

இடபம்: உள்ளத்தின் அடித்தளம் ஊமைக் கண்ணீர்வடிக்கும் வாழ்க்கையில் தனிமரமாகிவிட்ட எண்ணம் உருவாகும் குடும்பத்தில் தொல்லைகளுக்கும் இடமுண்டு எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

மிதுனம்; வார்த்தை ஜாலம் செய்வதில் வல்லவராகக் காட்சியளிப்பீர்கள் பொதுசனத் தலைமைக்கும் இடமுண்டு துரிதவேகத்தில் ஒரு சுற்றுப் பயணம் மேற்கொள்ளப்படலாம் சுவையான நிகழ்ச்சியுண்டு.

கடகம்: திட்டமிட்டுச்செயல் படவிரும்புவீர்கள் எனினும் பின்னணியில் பிளவிற்கு இடமுண்டு நண்பர் ஒருவர் உமது நலனைக் கெடுப்பதற்கு முனைவார் சோர்வுண்டு.

சிம்மம்: ஒலிபரப்பும் வாழ்க்கை உறவினர்கள் வாழ்க்கையில் ஒற்றுமை மலரும் எதிர்பார்த்ததைவிட அதிகம் கிடைக்கும் வாகனம் செலுத்துபவர்களுக்கு இன்று நன் மதிப்பும் பெருகும்.

கன்னி: இதயத்தின் ஏக்கம் இன்று தணியும் தேடிய பொருள் இன்று காலடியில் சரணடையும் பரோபகார சிந்தை மேவிடும் நண்பர் ஒருவருக்கு கைகொடுத்து உதவுவீர்.

துலாம்: கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய சம்பவமொன்று இடம்பெறலாம் தூற்றலைத் தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பார்கள் பெரியவர்களின் பேச்சைக் கேட்டு நடக்கவும்.

விருச்சிகம்: புதிய நண்பர்களுடன் பழகுவீர்கள் இன்று அவர்களுடைய தொடர்பு உங்கள் எதிர்காலத்துக்கு சிறந்ததாக அமையும் புதிய சூழ்நிலை உங்களுக்கு புத்துணர்ச்சியைத் தேடித்தரும்.

தனு: விஷப்பரீட்சை மூலம் விபரீதங்கள் விளையும் வைகளும் மொழிகளினால் பணத்தை இழக்க நேரிடும் நாளெல்லாம் அலைச்சல் உடல்நலிவு தோன்றும் பிணிக்கு இடங்கொடாது நடக்கவும்.

மகரம்: தெய்வ நம்பிக்கை மேலோங்கி நிற்கும் சிலருக்கு ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம் பொதுப் பணிகளில் ஈடுபடுவதன் மூலம் பொதுமக்களின் ஆதரவு உண்டு.

கும்பம்: உத்தியோக உயர்வுக்கும் உரிமைகளைப் பெறுவதற்கும் உகந்த நாள் கவர்ச்சிகரமான பொருளை வாங்குவதில் அதிக கவனஞ் செலுத்துவீர்கள் இடமாற்றமுண்டு

மீனம்: மெத்தவும் பொருள் சேரும் மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிட்டும் திருதிக்கும் செய்தியுடன் தேனான வாழ்வும் உண்டு

— சோதிடக்கலாநிதி —

திருமலை க. வேலுப்பிள்ளை


கடைசி 4 தினங்கள்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி - விஜயா
ஜெமினி - சாவித்திரி
சரஸ்வதிசபதம்
(ஈஸ்மன்ட் கலர்)
12-7-83 முதல்
பாக்கியராஜ் நடித்த
அந்த ஏழு நாட்கள்


# வேம்படி மகளிர் விளையாட்டுப் போட்டி

[கல்வியங்காடு]

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டு போட்டிகள் நாளைசனிக்கிழமை நடைபெறும். யாழ் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இவ்விளையாட்டுப்போட்டிகளின் போது பிரதம விருந்தினராக யாழ் மாவட்டச் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு தேவநேசன் நேசையா கலந்துகொள்வார். வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கான பரிசில்களை திருமதி தே. நேசையா அவர்கள் வழங்குவார்கள். இவர் மேற்படி பாடசாலையின் பழைய மாணவியாவார்.

# எறிபந்தில் சாம்பியன்

(கல்வியங்காடு)

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற 'எறிபந்துப்' போட்டியில் யாழ். கன்னியர் மடம் மகாவித்தியாலயம் 19 வயதுக் குட்பட்டவர்களுக்கான பிரிவில் வெற்றியீட்டிச் சாம்பியனானது.

# சென். பற்றிக்ஸ் வருடாந்த இல்லப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பிரதம விருந்தினராக டாக்டர் ஏ. எம். ஏபிரகாமும், திருமதி ஜோசி ஏபிரகாமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டிக்கான ஏற்பாடுகளை கல்லூரி விளையாட்டு ஆசிரியர் திரு. ஏ. சத்தியாப்பிள்ளை மேற்கொண்டுள்ளார்.

## காவலிலுள்ள....

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

தொடர்ந்து நடத்துகொண்டிருக்கிறது.

'பயங்கரவாதிகளின் உடல் நிலைமை முகாம்களில் கவனிக்கப்படுவதில்லை எனக் கூறப்படுகிறது. அது சரியல்ல.

77-ம் ஆண்டு முதல் இன்று வரை பயங்கரவாத நடவடிக்கைகளினால் 73 பேர் பலியாகியுள்ளார்கள்.

'37 பொலிஸ் ஆயுதப்படையினரும் 9 அரசியல் வாதிகளும், பொலிஸாருக்கு தகவல் கொடுத்த 13 பேரும், பொதுமக்கள் 14 பேரும் பயங்கரவாதிகளால் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் இக்கொலைகள் பற்றி சர்வதேச மன்னிப்பு சபை அறிக்கையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (இ-௧)

# மண்டைதீவில் பண்ணிசை வகுப்பு

(வண்ணார்பண்ணை)

மண்டைதீவு இந்து இளைஞர் மன்ற ஆதரவில் பண்ணிசை வகுப்பொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வகுப்பு மண்டைதீவு சித்திவிநாயகர் ஆலயத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் நடைபெற்று வருகின்றன.

பண்ணிசை மணி திரு இரா. திருஞானசம்பந்தன் இவ் வகுப்பு ஆசிரியராகப் பொறுப்பேற்றுள்ளார்.

[ப]

# பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றத்தில்
புன்னாலைக்கட்டுவன் புன்னாலைக்கட்டுவன்தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற வைரவப்பிள்ளை நரசிங்கம் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்

மரணமெய்திவரி கந்தையா சங்கரப்பிள்ளை புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன் தற்போது கீட்சொற் மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம்
இல. 153

எதிராக

நரசிங்கம் முத்துக்குமாரு- புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன்

எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கமிடப்பட்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு ஆவணி மாதம் 3 ஆந் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆ. சிவபாதசுந்தரம்
பதிவாளர்

1983ம் ஆண்டு சித்திரை மாதம் 19ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
என்னால் வரையப்பட்டது.

செ. இராமலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி
7759


வெளிநாடு செல்கிறீர்களா?
உங்கள் விமான பயணச் சீட்டுக்களை
எந்தவித சிரமமின்றி யாழ நகரிலேயே
பெற்றுக்கொள்ளுங்கள்.
விபரங்கட்கு:-
த மினுன்ஸ் கம்பனி
லிமிட்டெட்
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி
23680

## நல்லூர் அரச அலுவலகத்தினுள்

# ஆறு கைக்குண்டுகள்!

### ஊழியர்கள் இன்று குருநகர் முகாமில் விசாரிக்கப்படுவர்

(கோண்டாவில்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தினுள் நேற்று முன்தினம் நண்பகல் நுழைந்த இளைஞர்கள் ஆறு கைக்குண்டுகளை விட்டுச்சென்றது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நேற்று அலுவலகத்திற்கு விசாரணை மேற்கொள்ள வந்த யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் சிறீதரன் இதனைக் கண்டுபிடித்தார்.

ஒரு கடதாசிப் பையினுள் ஐந்து குண்டுகள் வைக்கப்பட்டிருந்தன. நேற்றுப் பொலிசார் முன்னிலையில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் திறக்கப்பட்டுச் சேதம் கணக்கிடப்பட்டது. ஒரு குண்டு பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

ஆங்கிலதட்டச்சு இயந்திரம், தமிழ் தட்டச்சு இயந்திரம், ரோனியோ மெஷின் கதிரைகள், மேசைகள், தொலைபேசி, பலகைகள், கண்ணாடிகள் யாவும் நொருக்கப்பட்டுள்ளன.

அங்கிருந்த குண்டுகளில் ஐந்து வெடிக்கவைக்கப்பட்டன.

யாழ் அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா, மேலதிக அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கம், யாழ் மாவட்ட அமைச்சின் இணைப்பதிகாரி திரு. பொ. பாலசிங்கம் ஆகியோரும் அலுவலகத்தைப் பார்வையிட்டனர்.

யாழ் உதவிப் பொலிஸ் அத்தியட்சர் திரு. மனோகரன் யாழ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரும் சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டனர்.

சம்பவம் நடக்கும்பொழுது அலுவலகத்தில் கடமையாற்றிய ஊழியர்கள் யாவரும் விசாரணைக்காக இன்று குருநகர் இராணுவமுகாமுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

## திருமலை அகதிகளுக்கு

# புனர்வாழ்வு நிதி

### யாழ். அபிவிருத்திசபை சேகரிக்கும்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை நிவாரணநிதி வழங்க 'புனர்வாழ்வு நிதி ஒன்றை ஆரம்பித்துள்ளது.

யாழ்.மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. அ. நடராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

யாழ். செயலகத்திலுள்ள அபிவிருத்திசபைத் தலைவரின் பணிமனையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அபிவிருத்தி சபைஉறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

யாழ் மாவட்ட எம்.பிக்கள் கொழும்பில் நின்றதால் இக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

அபிவிருத்தி சபை உறுப்பினர்கள் பத்துப் பேரிடமும் பொதுமக்களிடமிருந்து நிதி சேர்க்கும் படிவங்கள் வழங்கப்பட்டன. இப்படிவங்கள் யாழ். மாவட்ட எம். பி.க்களிடமும் வழங்குவதெனத் தெரிவிக்கப்பட்டது.

மாவட்டசபைத் தலைவர், உறுப்பினர்கள் இந்த நிவாரண நிதிக்கு தலா 500 ரூபா வழங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

இப்புனர்வாழ்வு நிதிக்குச் சகல தமிழ்மக்களும் நிதிஉதவி வழங்க வேண்டுமென்றும், எமது சகோதரர்களான திருகோணமலை அகதிகளுக்கு நிதி வழங்கவேண்டியது எமது கடமையென்றும் தலைவர் திரு. நடராசா வேண்டுகோள் விடுத்தார். (மா-அ)

---

## இந்திய சாரிகளுடன் நின்ற பிரயாணிகள் சிக்கினர்

(கண்டிக்குளி)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு. மட்டுநகர். செல்லவிருந்த பிரயாணிகள் இலரின் பொதிகளைச் சந்தேகத்தில் சோதனையிட்ட யாழ்ப்பாணம் பொலிசார், அப்பிரயாணிகளில் ஏழுபேரிடம் ரூபா ஐம்பது ஆயிரம் பெறுமதியான இந்திய சாரிகள், சாரங்கள் இருக்கக் கண்டுபிடித்தனர். இவை கடத்தற்பொருட்கள் எனச் சந்தேகித்து. பொருட்களையும் பிரயாணிகள் ஏழு பேரையும் யாழ், சுங்கப் பகுதியில் ஒப்படைத்தனர்.

யாழ் பதில் சுங்க சேகரிப்பாளர் திரு. சி. பொன்னையா பொருட்களைப் பறிமுதல் செய்ய உத்தரவிட்டார். (அ)

### ரயில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தபால்ரயில் சேவைநடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுத் தபால்ரயில் சேவை நடைபெறுவது பற்றி யாழ் புகையிரத நிலைய உத்தியோகத்தர்களிடம் கேட்டபோது, தபால் ரயில் சேவைபற்றி எவ்வித தகவலும் மேலிடத்திலிருந்து கிடைக்கவில்லையென்றும், பத்திரிகைகளில் மட்டுமே வெளிவந்ததாகவும்,பத்திரிகைகளைப் பார்த்துவிட்டு வந்த பிரயாணிகளே ஏமாற்றமடைந்ததாகவும் தெரிவித்தார்.

தபால் ரயில்சேவை இன்று வெள்ளி நடைபெறுமென்ற எதுவித தகவலும் கிடைக்கவில்லையென்றும் அவர் தெரிவித்தார். மா அ

### வை.எம். சி. ஏ. நிதிக்கு சேர்ந்துள்ள தொகை

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் அகதிகளுக்கு இருவீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கு யாழ். கிறிஸ்தவ இளைஞர்சங்கம் முன்வந்திருப்பதையடுத்து அதற்காகக் கழகம் ஆரம்பித்துள்ள நிவாரண நிதிக்கு வந்துசேர்ந்துள்ள பங்களிப்புக்களின் விபரம்வருமாறு:

ஜே. எம், சபாரணம் ரூபா 1000-00, கே. ரி விநாயகமூர்த்தி ரூபா 500-00, எம் கி, பிரான்சிஸ் ரூபா 500-00, வை எம். சி ஏ வடபிராந்தியம் ரூபா 1000-00 வை. எம், சி ஏ. முருங்கன் ரூபா 500-00. வை. எம் சி. ஏ. கல்லூரி ரூபா 150-00, பொன்ட் இன்ஸ்ரியூட்ஸ் ரூபா 500.00 மொத்தம் ரூபா 4150-00.

### திருமலைக்கு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பியிருந்த திரு. அமிர்தலிங்கம், பின்னர் அக் கோரிக்கையை வற்புறுத்திக் கடிதமும் எழுதியிருந்தார். இக் கோரிக்கையை மேலும் வற்புறுத்தும்வகையில் நேற்று ஜனாதிபதியை அவர் சந்தித்துப் பேசினார்.

வன்செயல்களினால் வீடுகளையும் உடைமைகளையும் இழந்த அகதிகளாகியுள்ள மக்கள் நம்பிக்கையுடன் மீண்டும் தமது பழைய இடங்களுக்குத் திரும்பிச்செல்வதாயின் அங்கு போதியளவு தமிழ்பேசும் பொலிசார் கடமையாற்ற வேண்டுமென்று திரு, அமிர்தலிங்கம் வற்புறுத்தியதாகத் தெரிகின்றது. (இ)

### சேர். பாராச..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாபம் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் செனட்டரும், சேர் பொன். அருணாசலத்தின் மருமகனுமான இவரது மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணையை சபையில் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வின்சன்ட் பெரேரா தாக்கல் செய்தார். திரு சரத் முத்தெட்டுவேகம, அமைச்சர் திஸ்ஸவிஜயவர்த்தன திரு லக்ஷ்மன்ஜயக்கொடி, டாக்டர் நீலன்திருச்செல்வம் முதலானோர் அனுதாபத் தீர்மானத்தின்மீதுபேசினார்கள்.

### இருளில் சபை!

(கொழும்பு)

நேற்றிரவு சில நிமிடங்கள் பாராளுமன்றம் இருளில் மூழ்கியது சுற்றுலாச் சபையின் 79ம் ஆண்டு அறிக்கை அங்கீகாரப் பிரேரணை மீதான விவாதத்தில் ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸ் பதிலளித்துப் பேசிக்கொண்டிருந்தபோது இரவு 7-50 மணிக்குச் சபை இருளில் மூழ்கியது. சுமார் மூன்று நிமிடங்களின் பின் சபை ஒளிபெற்றது (இ-அ)

## நாளை ஆங்கில ஆசிரியர் தேர்வுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஆங்கில ஆசிரியர்களுக்கான தெரிவுப்போட்டிப் பரீட்சை நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த யாழ். மாவட்டப்பரீட்சார்த்திகள் தமக்குரிய பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்காவிடில் யாழ் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் வடபகுதியில் புகையிரதசேவைபாதிக்கப்பட்டுள்ளதால் பரீட்சார்த்திகளுக்குரிய பிரவேச அட்டைகள் அதிகமான பரீட்சார்த்திகளுக்கு வந்து சேரவில்லை என்றும் இதற்குப்பதிலாக யாழ்கல்வித் திணைக்களத்தில் அட்டைகள் வழங்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்திலிருந்து சுமார் 2,000 பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத்தோற்றவுள்ளனர்.

ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் பின்தங்கிய பகுதிகளுக்கு நியமிக்கப்படலாமெனத் தெரிய வருகிறது. (மா-அ)

### சிவஞானத்துடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந் நகரங்களின் நிர்வாகம் பற்றியே இவர்களுடன் ஆலோசனை நடைபெற்றது. (இ-அ)

### சேயோன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுங்கத்தகவல் கொடுக்காமல் இருந்ததாக இவர்மீது குற்றஞ்சாட்டப்படலாம் என்று தெரிகின்றது. (இ)

### பரீட்சை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

ஆகஸ்ட் 15ம் திகதி நடைபெறவிருந்த 5ம் வகுப்புப் புலமைப்பரிசில் பரீட்சை செப்டம்பர் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

ஆகஸ்ட் 15ம் திகதி கிறிஸ்தவ பெருநாளாக இருப்பதால் இப்பரீட்சையை ஒத்திவைக்குப்படி இலங்கைத் தமிழ் ஆசிரியர்சங்கம் பரீட்சைத் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்தே இப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டதாகச் சங்கச் செயலாளர் தெரிவித்தார். (மா-அ)

## மூதூரில் 2 இடங்களில் 8 குடிசைகள் தீக்கிரை!

(திருகோணமலை)

மூதூரில் அமைந்தன்குளம் என்ற இடத்திலும் மிகுந்துபுர என்ற இடத்திலும் 8 குடிசை வீடுகள் எரிந்து சாம்பலாக்கப்பட்டுள்ளன.

அப்பகுதியில் இடம்பெற்ற இரு குண்டு வீச்சுச் சம்பவங்களையடுத்து மேற்படி குடிசை வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

---

## மரண அறிவித்தல்

வேலணை

### திருமதி அஞ்சலிதேவி விஜயகாந்தன்

வேலணை கிழக்கைச் சேர்ந்த திருமதி அஞ்சலிதேவி விஜயகாந்தன் மேற்குஜேர்மனியில் 4-7-88 இல் அகால மரணமானார் இவர் தியாகராசா விஜயகாந்தன் (மேற்குஜேர்மனி) அவர்களின் அன்புமனைவியும், நீரஜன், நீரஜா ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்றவேலாயுதபிள்ளை, மனோன்மணி ஆகியோரின் அன்புமகளும். கமலாதேவி, தர்மசேகரன் (மேற்கு ஜேர்மனி), சந்திராதேவி, காலஞ்சென்றவர்களாகிய உருத்திரசேகரன், நடனசேகரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், அருணகிரிநாதனின் அன்பு மைத்துனியும், சுஜந்தினி, காண்டீபன், பிரதீபன் ஆகியோரின் சிறியதாயாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் மேற்கு ஜேர்மனியில் 8-7-88 இன்று வெள்ளி நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் தருபவர்:
கா. பத்மநாதன் (மாமனார்)

7879

## டாக்டர், கோவை ஆட்கொணர்வு மனு:

# டி. ஐ. ஜி., சிறை அத்தியட்சகருக்கு நீதிமன்றில் ஆஜராக நோட்டீஸ்!

(கொழும்பு)

திரு. கோவை மகேசன், டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் ஆகியவர்கள் சார்பாக அப்பீல் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுக்கள் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் மாஅதிபர் திரு. டபிள்யு பி ராஜகுரு. சிறைச்சாலை சுப்பிரிண்டன் திரு எஸ். சத்தியமூர்த்தி ஆகியவர்களுக்கு இம்மாதம் 18ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி நொட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது. இந்த மனுக்கள் மீதான விசாரணை நேற்று நீதியரசர்கள் கே. ஏ. டி சில்வா, ஜே. அபேவர்த்தன ஆகியவர்கள் முன் நடைபெற்றது.

டாக்டர் தர்மலிங்கம் சார்பில் தமிழ் ஈழ விடுதலை அணியின் உதவிச் செயலாளர் கரவெட்டி துன்னாலை வடக்கைச் சேர்ந்த சண்முகம் செந்துராசாவும், திரு. கோவை மகேசன் சார்பில் அவரது மருமகள் கன்னாகம் சந்தரோதயாவைச் சேர்ந்த கே. சுவாமிநாதனும் ஆட்கொணர்வு மனுக்களைத் தாக்கல்செய்துள்ளனர்.

சட்டத்தரணிகள் எஸ். உருத்திரமூர்த்தி, கே. சிவன்பாதசுந்தரம் ஆகியோர் மனுதாரர்கள் சார்பில் ஆஜராகியிருந்தனர்.

கைதிகளைச் சந்தித்துப் பேசுவதற்கு சட்டத்தரணிகளுக்கு நீதிமன்றம் அனுமதியளித்தது. (இ)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டு ஜூலை மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Poat Office Sri Lanka, under number B. 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389 — 24126.